இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களை விட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?" என்று கேட்டார். அவர் இயேசுவிடம், "ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே! என்றார். இயேசு அவரிடம், "என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்" என்றார்.

(யோவான்: 21:15)

# இஸ்லாம் சமயத்தைத் தழுவியவர் மீண்டும் தாய் சமயத்திற்கு மாறலாம்



**சராவக் -** தங்கள் சொந்த மதத்திலிருந்து இஸ்லாம் மதத்திற்கு மாறியவர், மீண்டும் தமது தாய் சமயத்திற்கு திரும்ப விரும்பினால், அதற்குத் தடை விதிக்கக்கூடாது என மலேசிய உயர் நீதி மன்றங்களில் ஒன்று தீர்ப்பு வழங்கியுள்ளது. பல சமயத் தலைவர்களின் அமோக வரவேற்பைப்பெற்ற இந்தத் தீர்ப்பு எதிர்ப்பார்க்கப்படாத ஒன்று. கடந்த மார்ச் மாதம் மேற்கண்ட தீர்ப்பு வழங்கப்பட்டது.

சரவாக் மாநிலத்தின் பிடாயு என்ற பிரிவைச் சேர்ந்த 41 ரோனி அநாக் ரெபிட் என்பவர் பிறப்பால் ஒரு கிறிஸ்தவர். அவரது 10 ஆவது வயதில் அவரது பெற்றோர்களால் இஸ்லாம் சமயத்திற்கு மாற்றப்பட்ட நிலையில், தற்போது தமது தாய் சமயமான கிறிஸ்தவத்திற்கே திரும்ப விரும்பியபோது, ஷரியா நீதிமன்றம் அனுமதி மறுத்தது. இதனைத் தொடர்ந்து அவர் பொது (சிவில்) நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இதனிமித்தம் அவர் மீண்டும் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவ தடைவிதிக்க முடியாது என அரசியல் அமைப்புச்சட்டம் பிரிவு 11 இன் படி தீர்ப்பு வழங்கப்பட்டது. மலேசியாவில் இத்தகையத் திருப்பத்தை யாரும் எதிர்ப்பார்க்காத நிலையில் ஷரியா நீதிமன்றத்துக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள இத்தீர்ப்பு உண்மை உறங்கவில்லை என்பதை எடுத்துக்-காட்டுகிறது.

மேற்கண்ட தீர்ப்பை நீதிபதி Yew Jen Kie என்பவர், நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி ரோனி அநாக் ரெபிட் இப்போது சுயமுடிவின் பேரில் சமய மாற்றம் செய்து கொள்ள உரிமை கொண்டுள்ளார் என்று விளக்கம் அளித்தார். அதேவேளையில் தேசிய இலாக்கா அவரது அடையாளக்கார்டில் உள்ள 'இஸ்லாமியர்' என்பதை நீக்க 'கிறிஸ்தவர்' என மாற்றம் செய்யவும் உத்தரவளித்துள்ளது.

ரோனி அநாக் ரெபிட் இஸ்லாத்தை விட்டு வெளியேறவும் வேறு சமயத்தை ஏற்கவும் ஷரியா நீதிமன்ற ஆணை தேவையில்லை எனவும், நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம் போதுமானது என்றும் நீதிபதி Yew Jen Kie கருத்துரைத்துள்ளார். சரவாக் மாநிலத்தின் கிறிஸ்தவ கூட்டு அமைப்பின் பிரதிநிதிகள் அனைவரும் பெரும் மகிழ்வுடன் மேற்கண்ட நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்றனர்.

சமயம் என்பது சுய விருப்பத்தின் பேரில் ஏற்பது, குழந்தைப் பருவத்தில் பெற்றோரின் சமயத்தைப் பிள்ளைகள் பின்பற்றினாலும், பெரியவரானதும் விரும்பத்தின் பேரில் சமய மாற்றம் பெற தனிமனிதருக்கு உரிமை உண்டு என்பதை இவ்வுலகம் ஏற்றுக்கொண்ட நிலையில் மலேசிய மண்ணில் மட்டும் இஸ்லாத்தை விட்டு பிற சமயம் ஏற்கத் தடைவிதிப்பது நீதிக்கும் மனித உரிமைக்கும் விரோதமானது என்பது பலரின் கவலையாக இருந்தது.

நீதிமன்றங்களுக்கு அழகு நீதி வழங்குதல், நீதி வழங்குவதில் வெளியார் தலையீடு முற்றிலும் இருக்கக்கூடாது என்பது பொதுவான எதிர்ப்பார்ப்பு. இது மீறப்படும்போது மக்கள் நீதிமன்றத்தின் மேல் கொள்ளும் நம்பிக்கையை இழக்கின்றனர். இதற்கு சில நீதிபதிகளும் காரணமாகின்றனர். அவ்வாறின்றி, யாருக்கும் சாதகமின்றி, பயமின்றி உண்மையை முன்னிறுத்தி நீதி வழங்கும் நீதிபதிகள் வாழ்த்துப்பெறுவர். கடவுளுக்கு அடுத்தப்டியாகவும் இவர்கள் போற்றப்படுவர். உண்டையின் பக்கம் நிற்க ரோனி அநாக் ரெபிட் எடுத்துக் கொண்ட முயற்சிக்கும் வெற்றிக்கும் நமது பாராட்டுக்களும் செபமும் உரித்தாகட்டும்.

# மாமறைமாவட்ட அளவில் 3 நாள் திருமண பயிற்சி






**கோலாலம்பூர்-** கடந்த பிப்ரவரி மாதம் கோலாலம்பூர் மாமறைமாவட்ட அளவில் 3 நாள் இத்திருமண பயிற்சி, கோலாலம்பூர், மேய்ப்புபணி மையத்தில் நடைபெற்றது. இத்திருமணப்பயிற்சியின் மையக்கருத்து 'புதிய வாழ்க்கைத் தொடக்கம்' என்ற தலைப்பில் இடம்பெற்றது.

இதில் பல மாநிலங்களை சேர்ந்த திருமணம் புரியவிருக்கும் 23 ஜோடியினர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை அருள்தந்தை அல்பர்ட் ஆரோக்கியசாமி அவர்கள் தலைமையேற்று வழிநடத்தினார். இப்பயிற்சி முறையே:

1. இன்றையத் திருமணம். 2. அன்பில் தொடர்பு.
3. கடவுளும் திருமணமும். 4. திருமண அருள்சாதனம்.
5. திருமணத்தில் பாலுறவு. 6. குடும்ப நலத்திட்டம்.
7. பெற்றோரும் பிள்ளை வளர்ப்பும். 8. என் உடலை அறிந்து கொள்வது. (மருத்துவ விளக்கம்)
9. உண்மையாக நடந்து கொள்வோம். 10. குடும்பத்தில் வரவு செலவுத்திட்டம் என இவ்வாறாக 10 தலைப்புகளை கொண்டு இப்பயிற்சி சிறப்பாக நடைபெற்றது.

ஒவ்வொரு தலைப்பிலும் திருமண ஆன தம்பதியினர், தங்களின் திருமண வாழ்க்கையில் ஏற்பட்ட இன்பம், துன்பம் போன்ற அவர்கள் எதிர்நோக்கிய சவால்களை பகிர்ந்து கொண்டார்கள்.

அருள்தந்தை அல்பட் ஆரோக்கியசாமி அவர்கள், ஒவ்வொரு பகிர்விலும், இறைவன் திருமணம் வழியாக தம்பதியினரை எவ்வாறு ஆசிர்வதிக்கிறார் என்பதையும், அதனுடைய புனிதத்தையும், திருமண வாழ்க்கையைப் பற்றிய இறைவார்த்தையில் குறிப்பிடப்பட்ட வசனங்களையும் பகிர்ந்து கொண்டார். மேலும், ஆன்மிக ரீதியாக இறைவனுக்கு விருப்பமான குட்டித்திருச்சபையை எவ்வாறு உருவாக்க முடியும் என்பதையும் பகிர்ந்து கொண்டார்.

இந்த மூன்று நாட்களும், அருள்தந்தை அல்பட் அவர்கள் இப்பயிற்சியில் கலந்து கொண்ட ஜோடிகளோடு தானும் இணைந்து பயணம் செய்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

இத்திருமண பயிற்சியில் கலந்து கொண்ட ஜோடிகளுக்கு, திருமணமான தம்பதியினரின் இனிமையான அனுபவங்கள் மிகவும் ஈர்ப்பதாக அமைந்திருந்தது எனலாம்.

இப்பயிறசி மூன்று நாள் நடைபெற்றது. இறுதி நாளான மூன்றாம் நாள் பிற்பகல் 3.00 மணி அளவில், கலந்து கொண்ட ஜோடிகளை மீள்பார்வை செய்ததோடு சான்றிதழ் வழங்கப்பட்டு, ஆசிரோடும், இறுதி செபத்தோடும் இப்பயிற்சி இனிதே ஒரு நிறைவைக் கண்டது.

அடுத்தப் பயிற்சி, எதிர்வரும் 17-19 ஜூன், 2016, மற்றும் 7-9 அக்டோபர், 2016 நடைபெறவுள்ளது.

எதிர்வரும் காலங்களில் திருமணம் புரியவிருக்கும் புதிய ஜோடிகள், தத்தம் பங்கு அருள்தந்தைகளை சந்தித்து, ஆலோசனை பெற்று, அதன் படி பயிற்சி பெற தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 03-20266466.

- யசோதா ஜேம்ஸ்